**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**

**ஈரோடு மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

**(06.06.2015 முதல் 10.06.2015)**

**அறிக்கை எண் 43/2015** **தேதி: 05.06.2015**

**மாநிலத்தின் கடந்த வார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 30°செ முதல் 38°செ ஆகவும், இரவு நேர வெப்பநிலை 21°செ முதல் 29°செஆகவும் பதிவானது கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 20°செ முதல் 23°செஆகவும், இரவு நேர வெப்பநிலை 11°செ முதல் 13°செ ஆகவும் பதிவானது. தமிழ் நாட்டில் ஒரு சில இடங்களில் இலேசானது முதல் மிதமான மழை காணபட்டது.

**எதிர்பார்க்கப்படும் வானிலை ஈரோடு (06.06.2015 முதல் 10.06.2015)**

வரும் நாட்களில் வானம் இலேசான மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசான தூறல் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை் 32°செ முதல் 33°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 23°செ முதல் 24°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 78 முதல் 85 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 75 முதல் 78 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 7 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

| தேதி | மழை (மி.மீ) | அதிகபட்ச வெப்ப நிலை (°செ) | குறைந்த பட்ச வெப்ப நிலை (°செ) | மேக மூட்டம் (ஆக்டா) | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | காற்றின் வேகம் (கி.மீ/ மணி) | காற்று வரும் திசை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 06.06.15 | 4 | 33 | 24 | 5 | 78 | 75 | 7 | தென் மேற்கு |
| 07.06.15 | 2 | 33 | 24 | 4 | 78 | 75 | 7 | வட மேற்கு |
| 08.06.15 | 2 | 33 | 24 | 4 | 78 | 78 | 7 | தென் மேற்கு |
| 09.06.15 | 12 | 32 | 23 | 7 | 85 | 78 | 7 | தென் மேற்கு |
| 10.06.15 | 3 | 32 | 23 | 7 | 85 | 78 | 7 | தென் மேற்கு |

**வேளாண் அறிவுரை**

- ✓ புதியதாக அறுவடை செய்யப்பட்ட நிலங்களை உழுவதினால் மழையினால் ஏற்படும் மண் அரிப்பினை தடுக்கலாம்.
- ✓ கார் கால குறுகிய வயது நெல் நடவு செய்வதற்கு முன் அடி உரத்துடன் ஏக்கருக்கு 200 கிலோ வேப்பம்புண்ணாக்கு இடுவதினால் மண்ணில் தங்கியுள்ள நோய் கிருமிகளையும், பூச்சிகளையும் கட்டுப்படுத்தலாம்.
- ✓ தொடர்ச்சியான மழை எதிர்பார்க்கப்படுவதால் அனைத்து இறவைப் பயிர்களுக்கும் வடிகால் வசதி ஏற்படுத்தவும்.
- ✓ புதியதாக முளைத்துள்ள புற்களில் கால்நடைகளை மேயவிடாமல் தடுத்து பாக்டீரியா வகை நோய்கள் வராமல் பாதுகாக்கவும்.
- ✓ மழையில்லதா பகுதிகளில், கூடுதலான வெப்பம் காரணமாக பயறு மற்றும் காய்கறிகளில் சாறுஉறிஞ்சும் பூச்சிகளால் ஏற்படும் பாதிப்பை கட்டுப்படுத்த ஏக்கருக்கு 40 மிலி இமிடாகுளோரிபிரிட் மருந்தினை தெளிக்கவும்.

**குறுஞ்செய்தி**

- ✓ கார் கால குறுகிய வயது நெல் நடவு செய்வதற்கு முன் அடி உரத்துடன் ஏக்கருக்கு 200 கிலோ வேப்பம்புண்ணாக்கு இடுவதினால் மண்ணில் தங்கியுள்ள நோய் கிருமிகளையும், பூச்சிகளையும் கட்டுப்படுத்தலாம்.

**பேராசிரியர் மற்றும் தலைவர்**
**வேளாண் காலநிலைஆராய்ச்சி மையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை.**